**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 5/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | திரு. மருதமுத்து |
| Father's Name/Husband Name: | திரு. பெரியசாமி |
| Village : | ஒலைப்பாடி |
| Taluk : | குன்னம் |
| Age : | 27/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 25.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரிகள் 2 மற்றும் 4 ஆஜர். எதிரி 1 ஆஜர் இல்லை. அவருக்காக 317 குவிமுச மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி 3 இறந்து விட்டார். அவர் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது.)**
**முதல் விசாரணை**

நான் தற்போது ஓலைப்பாடி கிராமத்தில் வசித்து சென்னையில் ேஹாட்டல் ஒன்றில் பணியாளராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 22.08.2019ம் தேதியன்று நானும் சிவக்குமார் என்பவரும் காரைப்பாடி ரோட்டில் நடந்து சென்றுகொண்டிருந்தோம். அப்போது மாலை 6 மணியிருக்கும். அப்போது அ.சா.1 , 1ம் எதிரியிடம் நடைபாதையில் முள்வெட்டி போட்டிருப்பதாக சம்மந்தமாக கேட்டுக் கொண்டிருந்தபோது சுந்தரவடிவேலு என்பவர் அ.சா.1யை கொடுவாளால் தலையில் வெட்டினார். தனவேல் என்பவர் கட்டையால் அ.சா.1ன் தோள்பட்டையில் அடித்தார். கல்யாணசுந்தரம் என்பவர் கழியால் அ.சா.1ன் வலது கையில் அடித்தார். பாப்பா என்பவர் அ.சா.1ன் இடது உள்ளங்கையில் அடித்துவிட்டார். மேலும் எதிரிகள் கோபமாக அ.சா.1யைப் பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். மேற்படி சம்பவம் முள்வேலி போட்டது சம்மந்தமாக நடந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். வழக்கு சம்மந்தமாக போலிசார் எந்த தேதியில் எத்தனை மணிக்கு போலிசார் விசாரித்தார்கள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் எனது வீட்டில் 12.30 மணியளவில் போலிசார் விசாரணை செய்தார்கள். சம்பவயிடத்தில் யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் நான்கு எதிரிகளும் இருந்தார்கள். அவர்கள் பெயர்கள் என்ன என்றால் சுந்தரவடிவேல், தனவேல், கல்யாணசுந்தரம், பாப்பா மட்டும் தான் இருந்தார்கள் வேறு யாரும் அங்கில்லை. நான் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும் அ.சா.1 கொடுத்த புகாரில் மேற்கண்ட நபர்கள் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் சம்பவயிடத்தில் யாருமில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. 4ம் எதிரி பாப்பா அ.சா.1 கரும்பாயிரம் அஞ்சலை மற்றும் முருகன் ஆகியோர் மீது அதே தேதியில் அதே நேரத்தில் சம்பவம் நடந்ததாக புகார் கொடுத்து அந்த புகாரின் அடிப்படையில் இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பொய் வழக்கு. அ.சா.1 கரும்பாயிரம் எனது நண்பர். அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.